பொது சுற்றறிக்கை கடிதம் :- 02 - 151/2017

எனது இல :- ETR/J/UPAHS/10/2016
பி.ப.நா.அலுவலகம் (ET&R)
சுகாதார அமைச்சு,
385, வண பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10.

2017.08.16

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள்/ விஷேட இயக்கங்களின் தலைவர்கள்,
மத்திய சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
நிறுவனத் தலைவர்கள்,

**களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியலில் (Speech & Hearing Science) விஞ்ஞான இளமாணிப் பட்ட பாடநெறியில் செவிப்புல அளவீட்டு தொழில் நுட்பவியலாளர்களை (Audiometric Technicians) இணைத்துக்கொள்ளல் - 2017 (பக்கவாட்டான நுழைவு)**

மத்திய/மாகாண சுகாதார அமைச்சின் கீழ், சேவையிலுள்ள செவிப்புல அளவீட்டு தொழிநுட்பவியலாளர்களின் களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞான மாணிப்பட்ட பாடநெறியில் விஞ்ஞான இளமாணிப்பட்டத்திற்காக (Bsc in Speech & Hearing Science) பக்கவாட்டு நுழைவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படுபவர்கள் மேற்படி நான்கு வருட கற்கைநெறியின் முதல் கற்கை வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இரண்டாம் வருடத்திற்கு அப்பாடநெறியை தொடர்வதற்காக உள்வாங்கப்படுவர். உள்வாங்கப்படுவோருக்குரிய கற்கை நெறி 2017 செப்ரெம்பர் மாதத்தில் இரண்டாம் வருடத்தின் முதலாம் தவணைக்காலத்தில் இருந்து ஆரம்பிக்கும்.

1. நுழைவுத் தகைமைகள்.

   1. குறித்த துறையில் டிப்ளோமா சான்றிதளை பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் இலங்கை மருத்துவ சபையில் (SLMC) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   2. விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறு சுகாதார அமைச்சின் கீழ் ஆகக் குறைந்நது 05 வருட சேவையை கொண்டிருத்தல் வேண்டும்.
   3. விண்ணப்ப முடிவுத் திகதியில் 40 வயதைவிட குறைவாக இருத்தல்.
   4. ஒரே தடவையில் க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் உயிரியல் (விலங்கியல், தாவரவியல், இரசாயணவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் மூன்று சாதாரண சித்திகளையாவது பெற்றிருத்தல்.
   5. க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியையாவது அடைந்திருத்தல்.
   6. தெரிவு செய்யப்பட்ட ஆய்வுத் துறை பாடநெறியை தொடர்வதற்கான உள மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியத்தை கொண்டிருத்தல்.
   7. களனி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையிலான நுழைவுத் தேர்வின் மூலம் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. விண்ணப்பங்கள்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் முறையாக பூர்த்தியாக்கப்பட்டு, அது மத்திய அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களாயின் நிறுவனத்தலைவர்களாலும், மாகாண சுகாதார அமைச்சாயின் மாகாணப்பணிப்பாளராலும் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி பயிற்சியும் ஆய்வுகளும்), இல.385, வண பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு -10. எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு நிறுவனத் தலைவரூடாக மாகாண சுகாதார பணிப்பாளரூடாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
பூரணப்படுத்தப்படாத அல்லது குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்தினால் நடார்த்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியியல் விஞ்ஞான பட்டப் பாடநெறியில் விஞ்ஞான இள்மானிப்பட்டத்திற்காக செவிப்புல அளவீட்டு தொழில்நுட்பவியலாளர்களை இணைத்துக்கொள்ளல்" என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

3. நேர்வுப் பரீட்சை

தேர்வுப் பரீட்சையானது களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் நடத்தப்படும். விண்ணப்பதாரிகளின் கோட்பாடு மற்றும் வாய்மொழிக் கூறுகள் பரீட்சைக்கு தோற்றுமாறு வேண்டப்படுவர்.

4. சேவை ஒப்பந்தங்கள்

மேற்படி பட்டப்படிப்பு நெறியினை தொடர்வதற்கு தெரிவு செய்யப்படும் பரீட்சாத்திகளுக்கு 03 வருடகாலத்திற்கு வேதனத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படுவதுடன், அவர்கள் குறித்த பாடநெறியை பூர்த்தி செய்வதற்கும், பாடநெறியை நிறைவு செய்த பின்னர் பத்து வருட காலத்திற்கு சுகாதார அமைச்சுக்காக / மாகாண சுகாதார அமைச்சுக்காக சேவை செய்ய இணங்கி ரூபா 600,000.00 தொகைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் / மாகாண சுகாதார சேவை பணிப்பாளருடன் சேவை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும்.

தெரிவு செய்யப்பட்ட பரீட்சாத்தி சொல்லப்பட்ட பட்டப்படிப்பு பாடநெறியை நிறைவு செய்யாவிடின் அல்லது சுகாதார அமைச்சு / மாகாண சுகாதார அமைச்சு என்பவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளை மீறின் அவர்களுக்கு எதிராக பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும், இந்தப் பயிற்சியின் மூலம் பரீட்சாத்திகளுக்கு உயர் பதவிகளை கோருவதற்கு உரிமை இல்லை. அத்துடன் பாடநெறியை நிறைவு செய்த பயிற்சியாளர்களை திணைக்களத்தினுள்ள உயர் பதவிகளுக்கு உள்வாங்குவது, ஏற்கனவேயுள்ள பதவி வெற்றிடங்களையும், நியமனங்களை வழங்கும் அதிகாரிகளின் தனிப்பட்ட தீர்மானத்தையும் பொறுத்ததாகும்.

5. இந்த சுற்றறிக்கையிலுள்ள தகவல்களை உங்கள் நிறுவனம் / மாகாணம் / பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பகுதிகள் / விசேட நோய் நிலையம் என்பவற்றிலுள்ள தகுதியான அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதை உறுதிப்படுத்தவும்.

அனுர ஜெயவிக்கிரம
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

Janaka Sugathadasa
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

பிரதிகள்:-

1. பீடாதிபதி, FAHS பீடம், களனி பல்கலைக்கழகம்.
2. பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) III.,
3. பணிப்பாளர் (நிர்வாகம்) III.
4. பாடநெறி ஒருங்கிணைப்பாளர், களனி பல்கலைக்கழகம்
5. பிரதான சட்ட உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு

காரியாலய உபயோகத்திற்கு மட்டும்

களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியியலில் விஞ்ஞான இளமாணிப் பட்ட (Speech & Hearing Science ) பாடநெறியில் செவிப்புல அளவீட்டு தொழிநுட்பவியலாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் செப்ரெம்பர் 2017 (பக்கவாட்டான நுழைவு)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் ……………………………………………
………………………………………………………………………………………………..
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:- ……………………………………………
……………………………………………………………………………………………..……..
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3. செவிப்புல அளவீட்டு தொழில்நுட்பவியலாளராக முதல் நியமனத் திகதி :- ………………………………………..…….
தற்போதைய தரம் :- ……………………………………………………………..……….
4. முகவரி அலுவலகம் :- ………………………………………………………….
தனிப்பட்டது :- ……………………………………………………………………
தொலைபேசி :- அலுவலகம் :-……..………… தனிப்பட்டது :-……….………
கைத்தொலைபேசி :- ………………
5. தனிப்பட்ட விபரம்
பிறந்த திகதி :- …………………. தே.அ.அ.இல :- ……………………….
வயது :- வருடம் ……………. மாதம் …………… நாட்கள் …………….
(2017.08.25 இல் உள்ளபடி)
பால் :- ஆண்/பெண் ……………. குடியியல் நிலை :- ……….…………….

6. கல்வித் தகைமைகள் :-
(I) க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள்
சுட்டிலக்கம் :-………………….. வருடம் :-………………
பாடம் தரம்
1. ………………………… …………
2. ………………………… …………
3. ………………………… …………
4. ………………………… …………
(II) க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்
சுட்டிலக்கம் :-………………….. வருடம் :-………………
பாடம் :- ஆங்கிலம் தரம் :- …………

7. தொழில் விபரங்கள் :-
(1) தற்போதைய தொழில்
பதவியின் பெயர் :- ………………………………………………………………
நிறுவனம் / திணைக்களம் :- ……………………………..……………………
தற்போதைய நிலையத்தில் நியமனத் திகதி :- ………………………
நிரந்தரமானது / ஓய்வூதியமுடையது / ஓய்வூதியமற்றது / தற்காலிகமானது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா :- ……………………………………
உறுதிப்படுத்தப்பட்ட திகதி:-

(2) கடந்த கால தொழில் விபரம் :-

| நிறுவனம் | பதவிப்பெயர் | தொடக்கம் | வரை |
| --- | --- | --- | --- |
| | | | |

தொழில் தகைமைகள் / ஏனைய தகைமைகள் :-

| பரீட்சை | வருடம் | நிறுவனம் | சித்தி / தரம் |
| --- | --- | --- | --- |
| | | | |

(11).நீர் எப்பொழுதாவது குற்றவியல் குற்றத்திற்காக சட்டநீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ........................... ஆம் எனில், அத்தகைய குற்றச்சாட்டை பற்றியும், விதிக்கப்பட்ட தண்டனை பற்றியும்குறிப்பிடுக.......................................................................................

(12).செவிப்புல அளவீட்டு தொழில்நுட்பவியலாளராக இலங்கை மருத்துவ சபையில்(SLMC) பதிவு செய்துள்ளீரா? பதிவு இல :- ...................... திகதி:- ......................

(13).விண்ணப்பதாரியின் வெளிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது விபரங்கள் பூர்த்தி செய்யப்படாது அல்லது பிழையாக இருக்க காணப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் அல்லது அது பின்னர் தெரியவந்தால் எனது மாணவராக இருக்கும் நிலை நீக்கப்படும் என்பதையும், பிணை மற்றும் உடன்படிக்கையின்படி கட்டணங்கள் மற்றும் ஏனைய செலவுகள் எது பொருத்தமானதோ அதனை அறவிடுவதற்குமான பொறுப்புடையேன் என்பதையும் நான் நங்கு அறிவேன்.

இப்பயிற்சியின் பயனாக உயர்பதவி ஒன்றை கோருவதற்கு உரித்துடையவர் அல்ல என்பதையும் நான் அறிவேன். நான் இந்தபாடநெறியை பூர்த்தி செய்தாலும், திணைக்களத்திலிருந்து மேலதிக நலங்களை கோருவதற்கு உரித்துடையவர் அல்ல என்பதையும் நான் நன்கறிவேன்.

நான் மேற்படி பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டால் விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் / சம்பந்தப்பட்ட மாகாணசபை சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் ஒப்பந்தம் மற்றும் பிணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

................................... 
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

................ 
திகதி

நிறுவன தலைவரின் சான்றிதழ்:-

திரு/திருமதி/செல்வி :- ............................................... (பதவிப் பெயர்) ........... ....................... அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு களனி பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியியல் விஞ்ஞான இளமானிப் பட்டப்பாடநெறியில் தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

................. ..................................

திகதி நிறுவன தலைவரின் ஒப்பம்

(உத்தியோக பூர்வ இலட்சினை)

**********************************************************************

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (மாகாண விண்ணப்பதாரிகள் தொடர்பில்) சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி :- ............................................... (பதவிப் பெயர்) ........... ....................... அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு களனி பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியியல் விஞ்ஞான இளமானிப் பட்டப்பாடநெறியில் தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

................. ..................................

திகதி பி.சு.சே.பணிப்பாளரின் (RDHS) ஒப்பம்

(உத்தியோக பூர்வ இலட்சினை)

**************************************************************************

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (மாகாணங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு) சான்றிதழ்:-

திரு/திருமதி/செல்வி :- ............................................... (பதவிப் பெயர்) ........... ....................... அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு களனி பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பேச்சு மற்றும் கேட்டல் அறிவியியல் விஞ்ஞான இளமாணிப் பட்டப்பாடநெறியில் பட்டத்தை தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

................. ..................................

திகதி PDHS இன் ஒப்பம்

(உத்தியோக பூர்வ இலட்சினை